RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 222 | ஆகஸ்டு.14 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கருணை அடிப்படையில் பணி நியமன விதிகளில் திருத்தம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.14-

கருணை அடிப்படையில் பணி நியமனம் தொடர்பான விதிகளை திருத்தம் செய்து தமிழக அரசு அறிவித்துள்ளது. கருணை அடிப்படையில் அரசு பணிக்கு நியமிக்கப்படுவோருக்கான நடைமுறையில் தமிழ்நாடு அரசு சில மாற்றத்தை அறிவித்துள்ளது. இனிமேல், இத்தகைய நியமனங்கள் மாவட்டத் தொகுப்புகளின் அடிப்படையில்லாமல், மாநிலம் முழுவதும் ஒரே மூத்தத்தன்மை பட்டியலின் அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும்.



கடந்த காலங்களில் மாவட்ட ஆட்சியர் அல்லது தலைமைத் துறை அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் இப்போது மாநில அளவிலான பட்டியலில் சேர்க்கப்படும். இந்த பட்டியல் பராமரிப்புக்காக தனித்துவமான இணையதளம் உருவாக்கப்பட உள்ளது. அந்த இணையதளம் செயல்படத் தொடங்கும் வரை, 2025 ஆகஸ்ட் 4க்கு முன்பு நிலவிய விதிமுறைகள் பின்பற்றப்படும்.

இதுதொடர்பாக தலைமைச் செயலாளர் முருகநந்தம் வெளியிட்டுள்ள அரசாணையின் கூறியிருப்பதாவது : அரசு ஊழியர் மரணம் அடைந்தால் அல்லது மருத்துவ காரணங்களால் ஓய்வுபெற்ற தேதி முதல் மூன்று ஆண்டுக்குள் காலிப் பணியிடம் இருந்தால் மட்டுமே நியமனம் வழங்கப்பட வேண்டும். மேலும், கருணை அடிப்படையிலான நியமனங்களுக்கு பல்வேறு நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி நியமனம் பெறும் குடும்பம் உண்மையிலேயே பொருளாதார நெருக்கடியில் இருக்க வேண்டும். குடும்பத்தில் யாரும் அரசு அல்லது தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையில் இருக்கக் கூடாது. ஒரே குடும்பத்தில் ஒருவர் மட்டுமே நியமிக்கப்படலாம். நியமிக்கப்பட்டவர் தகுதியுள்ளவராக இருந்தால், சேர்ந்த நாளிலிருந்து ஒரு ஆண்டுக்குள் அவரது சேவை முறையாக மாற்றப்பட வேண்டும்.

அத்துடன், தமிழ்நாடு அரசு ஊழியர் சட்டம், 2016இன் பிரிவு 27இன் கீழ் உள்ள ஒதுக்கீட்டு விதிகள், கருணை அடிப்படையிலான நியமனங்களுக்கு பொருந்தாது. காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்குள் பணி வழங்கும் வகையில் திருத்தம் மாநில அளவில் பதிவு மூப்பு பட்டியல் தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 79வது சுதந்திர தினம்: தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீஸார் பாதுகாப்புப் பணிகள்

**சென்னை: ஆக.14–**

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சுமார் 1 லட்சம் போலீஸார் பாகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், முதல்வர் கொடி ஏற்ற உள்ள கோட்டையைச் சுற்றி 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சுதந்திர தின விழா நாளை மறுநாள் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம் தமிழக முதல்வர் ஸ்டாலின் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தினவிழா உரை நிகழ்த்த உள்ளார். இதையடுத்து, சுதந்திர தினவிழா நடைபெறும் புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் காவல் ஆணையர் அருண் உத்தரவின்பேரில் கூடுதல் காவல் ஆணையர்கள் கண்ணன் (தெற்கு), கார்த்திகேயன் (போக்குவரத்து), பிரவேஷ் குமார் (வடக்கு) மேற்பார்வையில், 9,100 போலீஸார் மூலம் சிறப்பு பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட சென்னை விமான நிலையம், ரயில் நிலையங்கள், பேருந்து முனையங்கள், பேருந்து, மெட்ரோ நிலையங்கள், வணிக வளாகங்கள், கடற்கரை பகுதிகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் செல்லும் இடங்களில் கூடுதல் போலீஸார் தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளுக்கு முடுக்கி விடப்பட்டுள்ளது.

இது தவிர சென்னையிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகள் மற்றும் ஓட்டல்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சந்தேக நபர்களின் நடமாட்டம், கேட்பாரற்ற வாகனங்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் காவல் துறைக்கு தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பெருநகர் முழுவதும் அந்தந்த காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நான்கு சக்கர மற்றும் இருசக்கர ரோந்து வாகனங்கள் மூலம் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, முக்கியமான இடங்களில் தடுப்புகள் அமைத்து காவல் துறையினர் மூலம் தீவிர வாகனத் தணிக்கைகள், முக்கிய இடங்களில் காவல் துறையினர் நியமிக்கப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டும், பாதுகாப்புப் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இதேபோல், தமிழகம் முழுவதும் டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் சுமார் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## தேவகோட்டை ஆனந்தா கல்லூரி, 21 ஆம் ஆண்டு விளையாட்டு விழா

தேவகோட்டை, ஆக.14

சிவகங்கைமாவட்டம் தேவகோட்டைஆனந்தாகல்லூரியில் 21 ஆம் ஆண்டு விளையாட்டு விழா கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தேவகோட்டை உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி பேசியதாவது, மாணவர்கள் விளையாட்டுத்துறையில் ஆர்வம் செலுத்துவதோடு கல்வித்துறையிலும் ஆர்வம் செலுத்த வேண்டும் விளையாட்டு, கல்வி இரண்டும் இருந்தால் தான் வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியத்தை அடைய முடியும். இன்றைய சூழலில் மாணவர்கள் உடல் தகுதியும் மனவலிமையும் பெற வேண்டும் இதற்கு மூலகாரணமாக இருப்பது விளையாட்டுத்துறை இந்த விளையாட்டு துறை வழியாக சாதித்தவர்களுடைய பட்டியலைச் சுட்டிக்காட்டி மாணவர்களுக்கு சிறப்புரை நல்கினார். மற்றொரு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் சரவணன், மருத்துவர் குமரேசன் மற்றும் சிவகங்கை மாவட்ட நேரு யுவகேந்திராவின் யோகநாதன் ஆகியோர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பல்வேறு கல்வி சார்ந்த கருத்துக்களை எடுத்துரைத்தனர். விளையாட்டு போட்டியில் தனிநபர் மாணவர் பிரிவில் வணிக மேலாண்மை துறையைச் சார்ந்த மாணவர் பேட்ரிக் முதலிடத்தையும் மாணவி பிரிவில் வேதியியல் துறை சார்ந்த மாணவி பவதாரணி முதலிடத்தையும் பெற்றுள்ளார்கள். ஒட்டுமொத்த முதலிடத்தை சுனில் சேத்ரி அணியினரும் இரண்டாம் இடத்தை பிவி சிந்து அணியினரும் பெற்றனர்.இறுதியாக உடற்கல்வி உதவிப் பேராசிரியர் சதீஷ் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர்கள் கல்வி முதன்மையர்கள் இருபால் பேராசிரியர்கள் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் லூர்து ராஜ், தேவகோட்டை புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் அருட் சகோதரிகள், ஆனந்தா கல்லூரியின் முன்னாள் செயலாளர் அருட் தந்தை ஆசீர்வாதம் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாட்டினை விளையாட்டுத்துறை குழு பேராசிரியர்கள் செய்து இருந்தனர்.










## ஆதார் 'குடியுரிமை'க்கான ஆதாரம் அல்ல: நீதிமன்றங்கள் சொல்வது என்ன?

புதுடெல்லி, ஆக.14-

இந்திய குடியுரிமைக்கான ஆதாரமாக ஆதார அட்டையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றமும், மும்பை உயர் நீதிமன்றமும் கூறியிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பிஹாரில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 11 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கு நீதிபதிகள் சூரிய காந்த், ஜாய்மாலாபாக்சி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் கூறும்போது. "ஐந்து கோடி வாக்காளர்கள், தாங்கள் இந்தியக் குடிமகன்கள் என்பதை இரண்டரை மாதங்களில் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இந்நிலையில், ஆதாரை ஆவணமாக ஏற்க மறுப்பது அநீதியாகும்" என்று வாதிடப்பட்டது.

அதற்கு, தேர்தல் ஆணையம் சார்பில் கூறும்போது, "மனுதாரர்கள் தரப்பில் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. வரைவு வாக்காளர் பட்டியலில் தவறுகள் இருந்தால் நேரடியாக தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பிக்கலாம். தற்போதைய நிலையில் ஆதார், வாக்காளர் அட்டை, ரேஷன் அட்டையை குடியுரிமை சான்றுக்கான ஆவணமாக ஏற்க முடியாது. இந்த ஆவணங்களில் போலிகள் அதிகம் உள்ளன" என்று தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட உச்ச நீதிமன்றம், "ஆதார் அட்டை குடியுரிமை சான்று கிடையாது என்ற தேர்தல் ஆணையத்தின் வாதத்தை நாங்கள் ஏற்கிறோம்" என்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, "ஆதார் அட்டை, பான் அட்டை, வாக்காளர் அட்டையை வைத்திருப்பதால் ஒருவர் இந்திய குடிமகனாக முடியாது. இந்த ஆவணங்கள் அடையாள ஆவணங்கள் மட்டுமே" என்று மும்பை உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்திருப்பதையும், அது தொடர்பான வழக்கும் கவனம் பெற்றுள்ளது.




வங்கதேசத்தை சேர்ந்தவர் பாபு அப்துல் ரூப் சர்தார். இவர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர் என்பது குற்றச்சாட்டு. கடந்த 2013ம் ஆண்டு முதல் மகாராஷ்டிராவின் தானே நகரில் இவர் வசித்து வந்தார். அங்கு பாபு கன்ஸ்ட்ரக்ஷன் என்ற பெயரில் கட்டுமான நிறுவனத்தையும் நடத்தி வந்தார். இந்தச் சூழலில் சட்டவிரோத குடியேற்ற சட்டத்தின் கீழ் கடந்த 2024ம் ஆண்டில் மகாராஷ்டிர போலீஸார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் ஜாமீன் கோரி மும்பை உயர் நீதிமன்றத்தில் பாபு அப்துல் ரூப் சர்தார் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, பான் அட்டை, பாஸ்போர்ட், வருமான வரி கணக்கு தாக்கல் செய்தற்கான ஆவணங்கள், வங்கி கணக்குகள், சமையல் காஸ் இணைப்பு, மின் கட்டண ரசீதுகள், தொழில் உரிம சான்று ஆகியவற்றை அவர் இணைத்திருந்தார். வழக்கு விசாரணையின்போது, தன்னை இந்திய குடிமகன் என்று பாபு அப்துல் ரூப் சர்தார் வாதிட்டார். இதை போலீஸ் தரப்பு திட்டவட்டமாக மறுத்தது.

போலீஸ் தரப்பில் நீதிமன்றத்தில் கூறும்போது, "வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக அவர் இந்தியாவுக்குள் ஊடுருவி உள்ளார். வங்கதேச அரசு சார்பில் அவருக்கு பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதோடு அவர் வங்கதேசத்தில் உள்ள தனது உறவினர்களுடன் நாள்தோறும் செல்போனில் பேசி வந்துள்ளார். அவர்களுக்கு பணம் அனுப்பி உள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஆதாரங்களும் போலீஸ் தரப்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மும்பை உயர் நீதிமன்ற நீதிபதி அமிர் போர்கர், இந்த வழக்கை விசாரித்து முக்கிய உத்தரவைப் பிறப்பித்தார். அதில், "குடியுரிமை சட்டம் 1955ல் இந்திய குடியுரிமைக்கான அனைத்து விதிகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த விதிகளை பூர்த்தி செய்யும் நபரே இந்திய குடிமகன் ஆவார்.

ஆதார் அட்டை, பான் அட்டை, வாக்காளர் அட்டையை வைத்திருக்கும் ஒருவர் இந்திய குடிமகனாக முடியாது. இந்த ஆவணங்கள், அடையாள ஆவணங்கள் மட்டுமே. இவை இந்திய குடியுரிமையை உறுதிப்படுத்தாது. யார் உண்மையான குடிமகன், யார் சட்டவிரோத குடியேறி என்பதை சட்டவிதிகளே உறுதி செய்கின்றன.

மனுதாரர் பாபு அப்துல் ரூப் சர்தார் ஜாமீன் கோரியுள்ளார். அவர் வங்கதேசத்தை சேர்ந்தவர் என்பதை போலீஸார் ஆதாரத்துடன் நிரூபித்துள்ளனர். மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் உண்மையா, போலியா என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இதன்படி இந்திய தனித்துவ ஆணையம், பாஸ்போர்ட் அலுவலகம், மத்திய வெளியுறவுத் துறை உள்ளிட்ட அரசு துறைகளை அதிகாரிகள் தனித்தனியாக விசாரணை நடத்த வேண்டும். இதற்கு கால அவகாசம் தேவைப்படும். மனுதாரரை ஜாமீனில் விடுதலை செய்தால் அவர் தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இது நாட்டின் பாதுகாப்பு சார்ந்த விவகாரம். எனவே ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மனுதாரரின் குடியுரிமை விவகாரம் தொடர்பாக ஓராண்டு காலத்துக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறுதி முடிவு எடுக்கவில்லை என்றால், அவர் ஜாமீன் கோரி மீண்டும் மனு தாக்கல் செய்யலாம்" என்று அந்த உத்தரவில் மும்பை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு காவல்துறையினர் கட்டுப்பாடுகள் விதிப்பு

மானாமதுரை, ஆக.14-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல் நிலையத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை வைக்கும் விதிமுறைகள் மற்றும் அனைத்து வகையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது இதில் குறிப்பாக ஏற்கனவே அனுமதி பெற்ற சிலைகளுக்கு மட்டுமே அனுமதி என்றும் புதியதாக அனுமதி இல்லை என்றும் உயரம் 5 அடிக்கு மேல் விநாயகர் சிலை வைக்க கூடாது என்றும் ரசாயனம் கலந்த சிலைகள் பயன்படுத்தக்கூடாது என்றும் காவல்துறை அனுமதிக்கும் வழித்தடங்களிலேயே சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் பல்வேறு விதிமுறைகள் விதிக்கப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டது இதில் அனைத்து பக்தர்களும் கலந்து கொண்டனர் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் மானாமதுரை துணை கண்காணிப்பாளர் மேற்பார்வையின் கீழ் மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவிந்திரன் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் குகன், ராஜதுரை ஆகியோர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



■ உங்களுடன்_ஸ்டாலின் மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் " உங்களுடன் ஸ்டாலின்" முகாம் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் . மு.க.ஸ்டாலின். ஆணைப்படி கன்னியாகுமரி மாவட்டம் ஈசாந்திமங்கலம் ஊராட்சி மக்களுக்கான மக்களுக்கான "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு மேற்பார்வையிட்டு பொதுமக்களிடம் நிறை குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் .நவீன் சந்தேவ், தோவாளை கிழக்கு ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் எட்வின், தி மு க நிர்வாகிகள் .பப்பு எலியால், .சிவா, தங்கம், சகாயராஜன் மற்றும் அரசு துறை அதிகாரிகள் தி மு க நிர்வாகிக மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்டத்தில் 2025ம் ஆண்டில் செல்போன் காணாமல் போனது தொடர்பாக காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட மனு ரசீதிற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சுமார் 25 இலட்சம் மதிப்புள்ள 100 செல்போன்கள் கைப்பற்றப்பட்டு, உரிய நபர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.சந்தீஷ்.IPS வழங்கினார்.

# தாம்பரத்தில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா வீடு வீடாக நேரில் சென்று தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்தார்





தாம்பரம், ஆக.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் முதியோர் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு சென்று ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தண்டையார்பேட்டையில் தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை பொதுமக்களின் வீடு தேடிச் சென்றடைய செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களான அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இதற்கு தாயுமானவர் திட்டம் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்தும் வகையில் சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை கோபால் நகருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ரேசன் பொருட் களை வீடு தேடி வினியோகம் செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 34,809 நியாயவிலைக் கடைகளை சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15 லட்சத்து 81 ஆயிரத்து 364 ரேசன் கார்ட்டில் உள்ள 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 பயனாளிகளும், 91 ஆயிரத்து 969 ரேசன் அட்டைகளில் உள்ள ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத்திறனாளிகளும் பயன் அடைய உள்ளனர்.

இதில் ஒரு பகுதியாக செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரத்தில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் வீடு வீடாக நேரில் சென்று ரேசன் பொருட்களை வீடு தேடி வினியோகம் முதலமைச்சர் தாயுமானவர் செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் டி.ஆர். கோபி அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்







■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இந்தியா இந்திய நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நேற்று வைகை ரயில் பாலம் மற்றும் மானாமதுரை சந்திப்பு இரயில் நிலையத்தில் மானாமதுரை இருப்புப்பாதை சிறப்பு சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி தலைமையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இரயில் நிலையத்தில் தீவிர சோதனைக்குப் பிறகு பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.





# பெரும்பாக்கம் அரசு கலைக்கல்லூரியில் கலைஞர் கருத்தரங்கம் மற்றும் மின்சார பேருந்து நிலையத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்

சோழிங்கநல்லூர், ஆக.14-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கத்தில் (ஆகஸ்ட் 11) முதல்வர், மு. க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக மாநிலங்களவை உறுப்பினர்,வில்சன் மாநிலங்களவை உறுப்பினர், தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.2 கோடி மற்றும் பெருநகர வளர்ச்சிக் குழுமம் CMDA நிதி ரூ.1 கோடி என மொத்தம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து திறந்து வைத்தார். தொடர்ந்து பெரும்பாக்கம் பகுதியில் ரூ.49.56 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்சாரப் பேருந்து பணிமனையை துணை முதல்வர் கொடியசைத்து திறந்து வைத்து, பேருந்தில் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டார். ரூ.233 கோடி மதிப்பிலான 135 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் (55 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 சாதாரண பேருந்துகள்) பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் பயணம் செய்தனர். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், தி. சினேகா, போக்குவரத்து துறை அமைச்சர், சா. சிவசங்கர், உயர் கல்வித் துறை அமைச்சர், கோவி. செழியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் அரசு பள்ளிக்கு

# கவுன்சிலர் தா.ஆதிலிங்க பெருமாள் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நன்கொடை வழங்கினார்

சென்னை, ஆக.14-

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகளின் உடல்நலன் கருதி, கன்னியாகுமரி மாவட்ட திட்ட குழு உறுப்பினரும், அகஸ்தீ ஸ்வரம் முதல் நிலை பேரூராட்சி 13 வது வார்டு கவுன்சிலருமான குமரி தா. ஆதிலிங்க பெருமாள் தனது சொந்த செலவில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை நன்கொடையாக வழங்கி

உள்ளார். இதை பள்ளியில் நிறுவி அதிலிருந்து வந்த சுத்தமான குடிநீரை மாணவ மாணவிகளுக்கு கொடுத்து தொடங்கி வைத்த நிகழ்வு நேற்று பள்ளியில் நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்ட திட்டக் குழு உறுப்பினரும், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி 13வது வார்டு கவுன்சிலருமான குமரி தா ஆதிலிங்க பெருமாள் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அகஸ்தீஸ்வரம் மேல்நிலைப்பள்ளி தலைமை

ஆசிரியர் ராமச்சந்திரன், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை ஸ்ரீதேவி, கல்வி மேலாண்மை குழுத் தலைவி ரதி, சாந்தி ரமேஷ், பேரூராட்சி துணைத் தலைவி சரோஜா, மேலாண்மை குழு உறுப்பினர்கள் செல்வ சுப்பிரமணியன், கிங்ஸ்லி, ஆரோக்கிய ராஜன், சேகர், சத்துணவு அமைப்பாளர் ராதிகா, வகுப்பு ஆசிரியர் நாகராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடந்த நிதியாண்டில் 2.17 லட்சம் கள்ள நோட்டு: மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, ஆக.14-

மக்களவையில் நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: கடந்த 202425ம் நிதியாண்டில் 2.17 லட்சம் எண்ணிக்கையிலான பல்வேறு மதிப்பிலான கள்ள ரூபாய் நோட்டுகள் கண்டறியப்பட்டன. இது முந்தைய ஆண்டு எண்ணிக்கையான 2.23 லட்சத்தை விட குறைவாகும்.

இந்த 2.17 லட்சம் கள்ள நோட்டுகளில் 1,17,722 நோட்டுகள் ரூ.500 ஆகும். இதையடுத்து 51,069 நோட்டுகள் ரூ.100 மதிப்பும், 32,660 நோட்டுகள் ரூ.200 மதிப்பும் கொண்டதாகும். இவ்வாறு அந்த பதிலில் கூறப்பட்டுள்ளது.

# சாதிய ஆவண படுகொலைக்கு எதிராக தனிச்சிறப்பு சட்டம் ஏற்றக்கோரியும்: படுகொலை செய்யப்பட்ட கவின் கொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம்







இளையான்குடி, ஆக 14-

சிவகங்கை மாவட்டம் தியாகி இமானுவேல் பேரவையினர் சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு தியாகி இமானுவேல் பேரவையின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பா ட்டத்தை தியாகி இமானுவேல் பேரவை சிவகங்கை மாவட்ட செயலாளர் மு.சத்தியமூர்த்தி தலைமை யிலும் லி.குப்பமுத்து ந.பெரியசாமி, ரமேஷ் , முத்தையா, பஞ்சமுத்து, கண்ணன், அழகுசிவம் முன்னிலை வகித்தனர்.

தியாகி இமானுவேல் பேரவையின் மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் . நெஞ்சை கர்ணன் வரவேப்பு உரையாற்றினார். மாவட்டத் தலைவர் த.ஆறுமுகம் கண்டன உரையாற்றினார் மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் பூமிநாதன் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சிவகங்கை மாவட்டத் தலைவர் முத்துராமலிங்க பூபதி அகில இந்திய விவசாய சங்க மகா சபா பொறுப்பாளர் திருநாவுக்கரசு ,தீண்டாமை ஒழிப்பு முன்னணி சிவகங்கை மாவட்ட செயலாளர் கருப்புசாமி தியாகி இமானுவேல் பேரவையின் மாநிலச் செயலாளர்கள் ராஜேந்திரன், இல.கிருஷ்ணமூர்த்தி. கண்டனப் பேருரை ஆற்றிய தியாகி இமானுவேல் பேரவையின் மாநில முதன்மைச்செயலாளர் வழக்கறிஞர் வீ.பி.வேல் முருகன் மற்றும் தியாகி இமானுவேல் பேரவையின் மாவட்ட ஒன்றிய கிளை பொறுப்ப ாளர்கள் இடதுசாரி அமைப்பு தோழர்கள் ஜனநாயக சக்திகள் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்..

# தாம்பரம் மாநகராட்சி பம்மல் பகுதியில் 10வது வட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை துவக்கி வைத்து பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார்கள்





பம்மல், ஆக.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் பகுதியில் முதியோர் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். கழகத்தலைவர் அவர்கள் சென்னை தண்டையார்பேட்டையில் துவக்கி வைத்ததை தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி அவர்களும் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அவர்களும் தாம்பரம் மாநகராட்சி 10வது வட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை துவக்கி வைத்து பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கினார்கள். உடன் தாம்பரம் மாநகராட்சி 10வது மாமன்ற உறுப்பினர் மதினா பேகம் பம்மல் தெற்கு பகுதி 10வது வட்டக் கழக செயலாளர் முகமது அப்பாஸ், கூட்டுறவு சார்பதிவாளர் நிஷா மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழகத் நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பசியிலிருந்து விடுதலை பயத்திலிருந்து விடுதலை பொதுமக்கள் நலன் கருதி தாராபுரம் மின்சார வாரியத்தில் SDPI கட்சியின் சார்பில் மனு அளிக்கப்பட்டது



திருப்பூர், ஆக.14-

திருப்பூர் தெற்கு மாவட்டம் தாராபுரம் நகரில் மின் கணக்கீடு மிகவும் தாமதமாக எடுக்கப்படுகிறது இதனால் பொதுமக்கள் அதிக தொகை கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தினர் மிகவும் சிரமத்துக்கு ஆளாகின்றனர் எனவே தாமதமின்றி மின் கணக்கீடு எடுக்கவும் பொதுமக்கள் சிரமத்துக்கு ஆளாவதில் இருந்து தடுக்க நடவடிக்கை எடுக்க கோரி சூப்பிரண்ட் இன்ஜினியர் S E அவர்களிடம் இன்று 13.8.25 புதன்கிழமை காலை 11.30 மணி அளவில் SDPI கட்சியின் தாராபுரம் தொகுதி தலைவர் M.முகம்மது இஸ்மாயில் அவர்கள் தலைமையில் மனு அளிக்கப்பட்டது

இந்நிகழ்ச்சியில் J.சையது அபுதாஹிர் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பு பொதுச் செயலாளர் H.முகமது இலியாஸ் தெற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் U.முகமது இர்பான் (இர்ஃபானி) தாராபுரம் தொகுதி செயலாளர் R.சிக்கந்தர் பாதுஷா தொகுதி செயற்குழு உறுப்பினர் M.சையது அபுத்தாஹிர் தாராபுரம் நகர தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனுவை பெற்றுக் கொண்ட சூப்பரண்ட் இன்ஜினியர் பொதுமக்கள் சிரமத்தை தவிர்க்க எந்த குறைகளும் இல்லாமல் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள்

# கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை:



கன்னியாகுமரி, ஆக.14-

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மணல் உள்ளிட்ட கட்டுமான பொருட்களை ஒரிடத்தில் இருந்து கொண்டு செல்வதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் மாவட்டம் முழுவதும் கட்டுமானத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் முடங்கியுள்ளது. பொதுமக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் டெம்போ, டாரஸ் உள்ளிட்ட வாகனங்களை வைத்து தொழில் நடத்துபவர்கள் மற்றும் இதனை மட்டுமே நம்பியிருக்கும் ஓட்டுனர்கள், தொழிலாளர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசும், அரசு அதிகாரிகளும் மக்களை எளிமைப்படுத்தி நன்மைபடுத்த வேண்டுமே தவிர கடுமைப்படுத்தி கஷ்டப்படுத்த கூடாது. வட்டிக்கு கடன் வாங்கி வாகனங்களை வாங்கி தொழில் நடத்தும் ஓட்டுனர்கள் கடன் செலுத்த முடியாமல் தற்கொலை செய்யும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அனைத்து தொழிலாளர்களும் இணைந்து அஞ்சுகிராமம் பகுதியில் ஒருநாள் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளனர். எனவே, அரசு நிர்வாகம் இப்பிரச்சினையில் தனிக்கவனம் செலுத்தி தொழிலாளர்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இதில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் தோழர்களுடன் கலப்பை மக்கள் இயக்கம் துணை நிற்கும் என தெரிவித்து கொள்கிறேன் இவ்வாறு பி.டி.செல்வகுமார் தெரிவித்தார்.

# உறுப்பு தானத்தை வலியுறுத்திய ரேலா மருத்துவமனையின் விழிப்புணர்வு வாக்கத்தான் நிகழ்வில் 650+ நபர்கள் பங்கேற்பு




குரோம்பேட்டை, ஆக.14-

சென்னை மாநகரின் பிரபல மருத்துவமனையான ரேலா ஹாஸ்பிட்டல், ஆகஸ்ட் 13 அன்று ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படும் உலக உறுப்பு தானத்தை கொண்டாடும் விதத்தில் ஒரு விழிப்புணர்வு நடைப்பயணத்தை (வாக்கத்தான்) நடத்தியது. கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உட்பட 650க்கும் கூடுதலான நபர்கள் இந்நிகழ்வில் உற்சாகத்தோடு பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. உறுப்புதானம் மீதான செய்தியை வலுவாக மக்களிடையே கொண்டுபோய் சேர்ப்பதும் உறுப்புதானம் வழங்க உயிரோடு இருக்கும்போதே வாக்குறுதிகளை வழங்க ஊக்குவிப்பதும் இந்த நிகழ்வின் நோக்கமாகும். உறுப்புதானத்தின் மூலம் வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயத்தை தொடங்க பல நோயாளிகளுக்கு நம்மால் உதவ முடியும்.

ஆரோக்கியத்தை முன்னிலைப்படுத்துகிற சமூக செயல்பாட்டின் மீது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த 5 கிமீ தூர வாக்கத்தான், ரேலா மருத்துவமனையிலிருந்து தொடங்கி தாம்பரத்திலுள்ள மெட்ராஸ் எக்ஸ்போர்ட் பிராசஸிங் ஸோன் (மெப்ஸ்) வரை நடைபெற்றது. தாம்பரம் காவல்துறை ஆணையரகத்தின் துணை ஆணையர் (போக்குவரத்து) திரு. சமாய் சிங் மீனா ஐபிஎஸ், ரேலா மருத்துவமனையின் செயலாக்க இயக்குநர் திரு. ரமேஷ் கிருஷ்ணன் மற்றும் தலைமை இயக்க அதிகாரி திரு. முகமது ஃபரூக் ஆகியோருடன் இணைந்து இந்நிகழ்வை கொடியசைத்து தொடங்கி வைத்தார். கல்லீரல் மற்றும் சிறுநீரக உறுப்புமாற்று அறுவைசிகிச்சையின் முதுநிலை நிபுணர் டாக்டர். கோமதி நரசிம்மன், இதய அறிவியல் மையத்தின் இயக்குநரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். ஸ்ரீநாத் விஜயசேகரன், உறுப்புமாற்று நுரையீரலியல் துறையின் கிளினிக்கல் லீடு டாக்டர். ஐஸ்வர்யா ராஜ்குமார் ஆகியோர் உட்பட ரேலா மருத்துவமனையின் உறுப்புமாற்று சிகிச்சை பிரிவின் மூத்த நிபுணர்கள் இத்தொடக்க விழா நிகழ்வில் கலந்து கொண்டனர். உறுப்புதானம் மீது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும், தெளிவான விளக்கத்தை வழங்கவும் இந்நி கழ்வின் பங்கேற்பாளர்களோடு மருத்து வர்களும், மருத்துவமனை பணியாளர்களும் ஆர்வத்தோடு ஈடுபட்டனர்.

உறுப்பு செயலிழப்பில் இறுதிநிலையை எட்டியதால் அவதியுறும் நோயாளிகளின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உறுப்புதானம் சாத்தியமாகும். இதயம், நுரையீரல்கள், கல்லீரல், சிறுநீரகங்கள், கணையம், குடல்கள் போன்ற மிக முக்கியமான உறுப்புமாற்று சிகிச்சைகள் வழியாக தானமளிக்கும் ஒரு நபரால் எட்டு நோயாளிகளின் உயிர்களை காப்பாற்ற முடியும். 2024ம் ஆண்டில் 18900க்கும் அதிகமான உறுப்புமாற்று சிகிச்சைகளை செய்து இப்பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை இந்தியா எட்டியிருந்தது. 2013ம் ஆண்டில் 5000க்கும் குறைவான உறுப்புமாற்று சிகிச்சைகளே நடைபெற்றதோடு ஒப்பிடுகையில் ஒரு ஆண்டில் பதிவான மிக அதிக உறுப்புமாற்று சிகிச்சைகள் 2024ல் நடத்தப்பட்டிருந்தன. யுஎஸ்ஏ மற்றும் சீனாவிற்கு பிறகு உறுப்புமாற்று சிகிச்சைகளின் மொத்த எண்ணிக்கையில் உலகளவில் இந்தியா மூன்றாவது இடம் வகிக்கிறது. இந்த எண்ணிக்கை சிறப்பானதாக தோன்றினாலும்கூட நம் நாட்டில் உடல் உறுப்புகளுக்கான தேவைப்படுகிறதை விட மிக மிக அதிகமாக இருக்கிறது; இதனால்தான் உறுப்புதானம் செய்வது மீதான விழிப்புணர்வை பரப்புவதும், தானமளிக்க உயிரோடு இருக்கும்போதே வாக்குறுதியளிக்க முன்வருவதும் இன்றியமையாதது.

# தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 61வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



பெருங்களத்தூர், ஆக.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி4வது மண்டலம் 61வது வார்டு சார்பில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் 4வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ். சேகர், மாமன்ற உறுப்பினர் ஹேமாவதி சேகர், வட்ட செயலாளர் ஆர்.மஞ்சுநாதன், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஆக.14-

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள பாதரக்குடி, சங்காரபுரம், அமராவதி புதூர் மற்றும் செஞ்சை நாட்டார் ஆகிய 4 கண்மாய்களின் மீன்பிடி உரிமையினை 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் சிவகங்கை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநரால் வரவேற்கப்படுகின்றன.

மேலும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் குறித்த விவரங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விபரங்கள் பெறலாம். மாற்றங்கள் ஏதேனும் இருருப்பின் மேற்காணும் இணையதளம் மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும். தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு, சிவகங்கை மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை 04575 240848 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது adfsivaganga@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ இராமநாதபுரம் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் இன்று மாபெரும் தமிழ்க் கனவு என்னும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் சிறப்பு பேச்சாளர் முன்னாள் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் முனைவர்.செ.சைலேந்திரபாபு, கருத்தாளர்களின் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதில் அளித்த மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன் ஆகியோர் உடன் இருந்தனர்

# கல்குளம் வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, ஆக.14-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, இன்று (13.08.2025) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் பத்மநாபபுரம் லெட்சுமி மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டம் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று கல்குளம் வட்டம் பத்மநாபபுரம் நகராட்சி வார்டு 10,11,12 உள்ளிட்ட பகுதி பொதுமக்களுக்கு பத்மநாபபுரம் லெட்சுமி மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் கோரிக்கைகள் கேட்டறிய ப்பட்டது. மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்களை நீண்ட நேரம் காக்க வைக்காமல் துரிதமாக கணினியில் பதிவேற்றம் செய்திட முகாம் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து நமது மாவட்டத்தில் 15.07.2025 முதல் 12.08.2025 வரை 102 முகாம்கள் நடத்தப்பட்டு 52,098 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிகளின் அருகாமையில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

# மாபெரும் தமிழ்க்கனவு - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் கவிஞர் யுகபாரதி சிறப்புரை ஆற்றினார்




தேனி, ஆக.14-

தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில், மாபெரும் தமிழ்க்கனவு - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர் கவிஞர் யுகபாரதி அவர்கள் அகம்புறம்அறம் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

கல்லூரி மாணவர்களிடையே தமிழர் மரபையும் தமிழ்ப் பெருமிதங்களையும் உணர்த்தும் ‘மாபெரும் தமிழ்க்கனவு’ திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு வருடங்களில் இரண்டு இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாணவர்கள் தமிழ் மரபு, பண்பாடு. தமிழர் தொன்மை, மொழியின் சிறப்பு, சமத்துவ வளர்ச்சி. சமூக பொருளாதார முன்னேற்றம், தொல்லியல் ஆய்வு ஆகியன குறித்து புதிய தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

இந்தியா பல்வேறு கலாச்சாரங்களை கொண்டது. ஒவ்வொரு கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்டு அதற்கு உரிய மதிப்பளிக்க வேண்டும். நமது கலச்சாரமே நமது அடையாளமாகும். அந்தவகையில், மாணவர்கள் பாடபுத்தகங்கள் மட்டுமின்றி நமது கலச்சாரம் குறித்த புதிய தகவல்களையும் அதிகமாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

நமது கலச்சாரத்தை பற்றி முழுமையாக தெரிந்து கொள்வதற்காக அரசின் சார்பில் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் சிறப்பு விருந்தினர் கவிஞர் யுகபாரதி அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

மேலும் இந்நிகழ்வில் உயர்கல்வி, வேலை வாய்ப்பு, வங்கி கடன், சுயதொழில், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட உதவித்தொகைகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியன குறித்து எடுத்துரைப்பதற்கு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கான கேள்விபதில் பகுதி நடைபெற உள்ளது. அதில் மாணவர்கள் தயக்கமின்றி வினா எழுப்பி தங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சி நடத்தப்படுவதன் நோக்கம் கருத்தரங்கம் நடத்துவது மட்டுமில்லை. இந்நிகழ்ச்சியில் புதிதாக தெரிந்து கொண்ட தகவல்களை மாணவர்கள் தொடர்ச்சியாக பிறருக்கு எடுத்துரைக்க வேண்டும். அப்பொழுதுதான் இத்திட்டத்தில் வெற்றி பெற முடியும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர் கவிஞர் யுகபாரதி அவர்கள் தெரிவித்ததாவது,

நான் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தமிழ்க்கனவு நிகழ்ச்சிகளில் சிறப்புரை ஆற்றி உள்ளேன். ஆனால் முதல்முறையாக தேனி மாவட்டத்தில் சிறப்புரை ஆற்றுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். ஏனெனில் தமிழை வளர்த்த ஆகச்சிறந்த கவிஞர்கள் பலர் இம்மண்ணில் பிறந்தவர்கள். தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட இரும்பின் தொன்மையை வைத்து, உலக வரலாறு தமிழ்நாட்டிலிருந்துதான் எழுதப்பட வேண்டும் என்ற செய்தியை அறிந்து கொண்டீரிப்பீர்கள்.

ஏறக்குறைய ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இரும்பின் தொன்மை சங்கஇலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கீழடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகள் மூலம் புதுபுது தகவல்கள் கிடைத்துக் கொண்டே உள்ளது.

தமிழ் மொழியில் ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் ஒரு சிறப்பு உண்டு. அனைத்து எழுத்துக்களுக்கும் ஓசையை குறிப்பிட்ட உலகின் ஒரே மொழி தமிழ்மொழி.

தமிழ்மொழிக்கு நீண்ட நெடிய வரலாறு மற்றும் பண்பாடு உள்ளது. உலகில் உள்ள அனைத்து மொழிகளின் சிறப்புகளை உள்ளடக்கியது தமிழ்மொழி.சங்க இலக்கியங்களில் காகம், உள்ளிட்ட உயிரினங்களின் 40 வகையான கனவுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப மனித வாழ்க்கையின் உயர்வு அவரவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவாகவே இருக்கும். எந்த ஒரு செயலையும் மனம் ஒன்றி செய்யும் பொழுது நிச்சயமாக வெற்றி பெற முடியும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை 1.சங்கஇலக்கியம் (அகம், புறம்) 2. பக்தி இலக்கியம் (இகம், பரம்) 3.தேசிய இலக்கியம் (சுதந்திரம்), 4. சமகால இலக்கியம் (சுய அறம்) ஆகிய நான்கு வார்த்தைகளுக்குள் புரிந்து கொள்ளலாம். அகமும், புறமும் அறத்தோடு இருக்க வேண்டும். அகத்தையும் புறத்தையும் புரிந்து கொண்டால் ஒரு மனிதன் அறத்தோடு வாழ்வான். சங்க காலத்திலிருந்து தற்பொழுதுவரை கூறப்படுவது ஒன்றுதான், அனைவரும் கட்டாயம் கல்வி பயில வேண்டும் என்பதே.

புறநானூற்றில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இயற்றிய ‘’உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே’’ என்ற பாடலை அனைவரும் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மொழிதான் உலகை இயக்கி கொண்டுள்ளது என கவிஞர் யுகபாரதி அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, கல்லூரி மாணவர்களின் கேள்விகளுக்கு கவிஞர் யுகபாரதி அவர்கள் விளக்கமளித்தார்கள். பின்னர் கேள்விபதில் பகுதியில் பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துசித்ரா, இணைஇயக்குநர் (கல்லூரி கல்வி) திரு.பொன்முத்து ராமலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கையில் நூலகத் தந்தை எஸ்.ஆர் ரங்கநாதன் பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை சத்தானந்த பாரதி மாவட்ட மைய நூலகத்தில் பணிபுரியும் நூலகர்கள் வெங்கடவேல், பாண்டி ,முத்துக்குமார், கனகராஜ்,சாந்தி ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து நூலகர் வட்டம் சார்பில் கௌரவிக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் வாசகர் வட்ட தலைவர் அன்புத் துறை எழுத்தாளர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்




■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட திருமோகூர்,ராஜாக்கூர்,புதுதாமரைப்பட்டி, இலங்கியேந்தல், பனைக்குளம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தாசில்தார் மானேஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிராஜ் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மகேஸ்வரி,ஊராட்சி செயலாளர்கள் பழனி குமார்,வீரணன், நந்தகுமார், சோனியா முத்து, மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.மேலும் திமுக நிர்வாகிகள் ரகுபதி, நிஷாந்த்,மழுவேந்தி ஆகியோரும் முகாமில் கலந்து கொண்டனர்.



■ மதுரை கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பட்டூர் கேசம்பட்டி ஆகிய ஊராட்சி களுக்கு நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் தாசில்தார் செந்தாமரை,வட்டார வளர்ச்சி அலுவலர் செல்லபாண்டியன் , துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார்,ஊராட்சி செயலாளர்கள் சேரலாதன், சேகர் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள்ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றனர். முகாமில் திமுக ஒன்றிய செயலாளர் ராஜராஜன், இலக்கிய அணி கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ மதுரை மேலூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கீழையூர்,கீழவளவு ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் தாசில்தார் செந்தாமரை,வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தரசாமி,சரஸ்வதி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செல்லப்பாண்டியன் ஊராட்சி செயலாளர்கள் கணேஷ் மணிகண்டன்,பால முருகன் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றனர்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் சின்ன கண்ணனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பள்ளியின் தலைமை ஆசிரியர் வெங்கடாஜலபதி தலைமையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் பாதுகாப்பு அலுவலர் ராமச்சந்திரன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. இதில் பள்ளி குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது

# தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் பாடத் திட்டத்தில் உறுப்பு தான பற்றி விழிப்புணர்வு தேவை மதுரை மீனாட்சி மருத்துவமனை நிபுணர்கள் கருத்து

மதுரை, ஆக.14-

ஆண்டுதோறும் ஆகஸ்ட 11 ஆம் தேதி அனுசரிக்கப்படும் உலக உறுப்பு தான தினத்தை முன்னிட்டு மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் நடைபெற்ற பத்திரிக் கையாளர் சந்திப்பில் மீனாட்சி மிஷன் மருத்துவமனை, மேம்பட்ட நிபுணத்துவத்துடன் ஆண்டுக்கு சுமார் 40 சிறுநீரக மாற்று அறுவை சிவச்சைகளையும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளையும் ஒட்டுமொத்தமாக 2000 க்கும் மேற்பட்ட உறுப்பு மாற்று சிகிச்சைகளையும் இதுவரை செய்துள்ளது.




இந்தியாவில் உறுப்பு தான விகிதம் பத்து இலட்சம் மக்களுக்கு ஏறக்குறைய ஒரு தானமளிப்பவர் என்ற அளவில் மிகவும் குறைவாக இருப்பதால் உறுப்புகளின் தேவைக்கும் கிடைப்பதற்கும் இடை யிலான இடைவெளி மிகப்பெரியதாக உள்ளது. இந்த சூழலில் உயிருடன் இருப்பவர்கள் மற்றும் மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து பெறப்படும் உறுப்பதானம் குறித்த விழிப்பணர்வை ஏற்படுத்துவதும் மேம்பட்ட உறுப்பு மாற்று சிகிச்சை நுட்பங்களைக் கையாள்வ தற்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு முக்கியமாகும்“

ஸ்பெயின் போன்ற நாடுகளில் பத்து இலட்சம் பேருக்கு 30 நபர்களுக்கும் மேல் இருக்கும் விகிதத்துடன் ஒப்பிடும் போது இந்தியாவில்இந்த விகிதம் குறைவாகவே உள்ளது. ABO உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது, தானமளிப்பவர் மற்றும் பெறுநரின் இரத்தப் பிரிவுகள் நிலையான ABO இரத்த வகை அமைப்புப்படி பொருந்தாத நிலையில் செய்யப்படும் ஒரு வகை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையாகும் பொதுவாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் தானம் பெறுநரின் நோயெதிர்ப்பு அமைப்பு தானம் பெறப்பட்டு பொருத்தப்பட்ட உறுத் தாக்குவதைத் தடுக்க இணக்கமான இரத்தப் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கிடையே தான் செய்யப்படுகின்றன. ABD நிகழ்வுகளில் இந்த இயற்கையான நோயெதிர்ப்புத் தடையானது மேம்பட்ட மருத்துவ தெறிமுறைகள் மேற்கொள்ளப்படுகிறது. மூலம் சமாளிக்கப்பட்டு உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது என்று மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் நிபுணர்கள் தெரிவித்தனர். மருத்துவ நிபுணர்கள் இது தொடர்பான விரிவான தகவல்களை வழங்கினர் மருத்துவ நிபுணர்கள் குழுவில் குடல் இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் துறையின் முதுநிலை நிபுணர் மற்றும் மருத்துவ இயக்குனர் டாக்டர் ஏம மருத்துவ நிர்வாகி டாக்டர் கண்ணன் சிறுநீரகவியல் துறையின் தலைவர்மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் சம்பத் குமார் சிறுநீரக அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் ரவிச்சந்திரன்,குடல் இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர்கள் மோகன், சீனிவாசன் ராமசந்திரன் ஆகியோர் இருந்தனர்.





## மேடவாக்கம், வெள்ளக்கல் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்

மேடவாக்கம், ஆக.14-

தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க, இடம் : மேடவாக்கம், வெள்ளக்கல் திமுக அரசின் பல நலத்திட்டங்களை செயல்படுத்தியத்தின் தொடர்ச்சியாக மேலும் ஒரு மகத்தான மாபெரும் திட்டமான தாயுமானவர் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக சோழிங்கநல்லூர் தொகுதிக்குபட்ட புனித தோமையார் மலை ஒன்றிய, மேடவாக்கம் வெள்ளக்கல் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடையில் தாயுமானவர் திட்டத்தினை சோழிங்கநல்லூர், எஸ். அரவிந்த் ரமேஷ் கொடியசைத்து தொடங்கி வைத்து 60வயதுக்குட்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இல்லத்திற்கு சென்று ரேசன் பொருட்களை மாதந்தோறும் சனி, ஞாயிறு கிழமைகளில் பொருட்கள் வழங்கும் திட்டத்தினை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர், ஜி. வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர், சங்கீதா பாரதிராஜான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ஜே .இ.பாண்டியன், ஒன்றிய பெருந்துணை தலைவர், பிரசாந்த், ஒன்றிய குழு உறுப்பினர், பன்னீர்செல்வம், துணைத் தலைவர், எஸ். கோபு, ஒன்றிய கழக துணைச் செயலாளர், எச். டி. போஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஆர் .எஸ்.லோகேஸ்வரா , ராமையா நகர் கிளை கழக செயலாளர், எஸ். சுரேஷ், வடக்குப்பட்டி கிளைக் கழக செயலாளர், மோகன்பாபு உள்ளிட்ட வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.






■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஓ வெ செ மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மூலம் போதையில்லா இந்தியா என்ற தலைப்பில் விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது கூட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு சமூக பணியாளர் சத்தியமூர்த்தி மானாமதுரை வருவாய் ஆய்வாளர் திரு பாலுசாமி நகராட்சி சுகாதார ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் சமூக நீதி விடுதி காப்பாளர் செந்தில் குமார் ஆகியோர் கலந்துகொண்டு போதையினால் ஏற்படும் தீங்குகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியர் திரு முருகன் ஏற்பாடு செய்திருந்தார் கூட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் மாதாந்திர கூட்டம் நேற்று சங்கத்தின் தலைவர் பொறியாளர் ராமமூர்த்தி தலைமையில் நிர்வாக செயலாளர் யுவராஜ் வரவேற்புடன் சங்கத்தின் திட்டம் செயலாளர் மேஜர் பிரேம்நாத் சங்கத்தின் அறிக்கை தாக்கல் செய்ய பொருளாளர் கண்ணன் நன்றி உரையாற்றினார் விழாவில் மானாமதுரை நகராட்சி நிர்வாகத்திற்கு நிரந்தர ஆணையாளர் மற்றும் ஆய்வாளர்களை நியமிக்க வேண்டுமென தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்

## ஜாதி என்னும் சாக்கடைக்குள் இளைஞர்களே சிக்கி விடாதீர்கள்... பெருந்தலைவர் காமராஜர் கழக நிறுவனத் தலைவர் அருணாச்சலம் வேண்டுகோள்

தென்காசி, ஆக.14-

தென்காசி மாவட்டம் பெருந்தலைவர் காமராஜர் கழக நிறுவனத் தலைவர் கீழப்பாவூர் அருணாசலம் தமிழக இளைஞர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது இளைஞர்கள் சாதி என்னும் சாக்கடைக்குள் சிக்கி விடாமல் பறந்து விரிந்த மனதோடு உயர்ந்த சிந்தனைகளோடு ஒழுக்கத்தோடு நல்வாழ்வு வாழ வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார் சமீப காலமாக தமிழக இளைஞர்கள் போதைக்குள் சிக்கி புதைகுழியில் தவித்து வருகின்றனர் ஒரு சில அரசியல் தலைவர்கள் தங்கள் சமுதாயம் மற்றும் படித்து வேலை இல்லாத இளைஞர்களை சாதி என்னும் சாக்கடைக்குள் அமுக்கி அவர்கள் வேலை வாய்ப்புகளை நாடாமலும் போதைப் பழக்கத்திற்கு அடிமை ஆக்கி அவர்களின் கைப்பாவையாக ஆக்கி வைத்துள்ளனர் தமிழக முழுவதும் எத்தனையோ வேலை வாய்ப்புகள் இளைஞர்களுக்கு உள்ளன வெளிநாட்டு தொழில் முதலீட்டுக்காரர்களால் சிறு கிராமங்களில் கூட தொழில் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் மென்பொருள் நிறுவனங்கள் வரத் துவங்கி உள்ளன ஆனால் அவற்றில் பணியாற்ற தான் தமிழக இளைஞர்கள் முன் வரவில்லை வேலைவாய்ப்பு இல்லை வேலைவாய்ப்பு இல்லை என்று நூற்றுக்கு நூறு தரம் நகரின் நான்கு புறமும் கூட்டம் கூடி பேசி வருகின்றனர் நம் தமிழ் நாட்டில் உள்ள வேலைகளை செய்ய வட மாநிலத்தவர்கள் இங்கே குவிந்து வருகின்றனர்



தமிழக இளைஞர்கள் வெளிநாட்டில் போய் சம்பாதிப்பது பெருமை என்று எண்ணுவது போல் வடமாநிலத்தவர்கள் நம் தமிழகத்தில் வந்து வேலை பார்த்து அவர்களது குடும்பங்களை காப்பாற்றி வருகின்றனர் தமிழ்நாட்டில் அவர்களுக்கு மூன்று வேளை உணவும் 300 ரூபாய் சம்பளம் கொடுத்தால் போதும் தமிழ்நாடு இளைஞர் களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தாலும் வேலை பார்க்க வர மறுக்கின்றனர் குடிக்கும் போதைக்கும் அடிமையாகி தங்கள் வாழ்வை இளமையை தொலைத்து வருகின்றனர் சில அரசியல் கட்சி மற்றும் சாதி அமைப்புகள் தங்கள் சாதி இளைஞர்களை சாதி என்னும் சாக்கடைக்குள் தள்ளி அவர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக் குகின்றனர் ஆங்காங்கே ஜாதி கலவரம் ஆணவ படுகொலை என தொடர்ந்து நடைபெறுகிறது இதுகளில் இளைஞர்கள் சிக்காமல் சாதி தலைவர்கள் கைப்பாவையாக ஆகாமல் பொதுநல நோக்கோடு இந்தியாவில் தனி நபர் பொருளாதாரத்தில் இரண்டாம் இடம் விளங்கும் தமிழ்நாடு முதல் இடத்திற்கு வருவதற்கு தேவையான முன்னெடுப்புகளை இளைஞர்கள் செய்ய வேண்டும் மேலும் குறிப்பாக டாக்டர் அம்பேத்கார் பெருந்தலைவர் காமராஜர் தெய்வீகத் திருமகன் முத்துராமலிங்க தேவர் போன்றவர்களை சாதித்தலைவர் ஆக்காமல் சாதித்த தலைவர்களாக எண்ணி அவர்களின் வழியை பின்பற்றி தங்களையும் உயர்த்தி தங்கள் பெற்றோர்கள் வாழ்வில் மகிழ்ச்சியை உண்டாக்குவதோடு தமிழகத்தின் இளைஞர்கள் மற்ற மாநிலத்தவர்களுக்கு முன்னோடியாக திகழ வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161